# பார்போற்றும் அன்னையே உன் திருவிழா

பார்போற்றும் அன்னையே உன் திருவிழா
உனைப் தேடும் அன்பருக்கு
அருள் விழா - ( 2 )
ஊரெங்கும் ஊர்வலம்
உனைக்காணும் திருக்கோலம் - ( 2 )
எந்தன் உள்ளம் துள்ளித் துள்ளி மகிழ்ந்தாடுதே
ஏழை எந்தன் நெஞ்சம் இன்று கவிபாடுதே
பார்போற்றும் அன்னையே உன் திருவிழா
உனைப் தேடும் அன்பருக்கு அருள் விழா

**1)**
தங்கத் தேரினிலே மின்னும் ஒளியினிலே
கண்கொண்டு பார்ப்;பேன் மகிழ்ந்தாடுவேன் - ( 2 )
வங்கக் கடலலைகள்
கொட்டும் கரவொலிகள் -( 2 )
மாதாவே உனைக்காண மனம் ஏங்குதே
வரம் தருவாய் துணைபுரிவாய் எங்கும் பொங்கும் உந்தன்
அருள் மழையை நித்தம் பொழிய வந்த அருள் வடிவே
பார்போற்றும்

**2)**
நித்தம் புது ராகம் நெஞ்சில் உருவாகும்
உனைப்பாடி நானும் மகிழ்ந்தாடுவேன்-( 2)
எட்டுத் திசையெங்கும்
என் தாயின் பெயர் சொல்லி -( 2 )
பூமாலை நான் சூட்டிப் புகழ் பாடுவேன்
வரம் தருவாய் துணைபுரிவாய் எங்கும் பொங்கும் உந்தன்
அருள் மழையை நித்தம் பொழிய வந்த அருள் வடிவே

பார்போற்றும்